# பொதுக்காலம் 25 ஆம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு - A

2020-09-20

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 55: 6-9,
திருப்பாடல் 145: 2-3. 8-9. 17-18,
திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 20-24, 27,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 20: 1-16

## திருப்பலி முன்னுரை:

இயேசுவின் அன்பிற்குரியவர்களே, பொதுக்காலத்தின் 25ம் ஞாயிறுத் திருப்பலியில் இறைவனின் நீதியையும், அன்பையும், தாராளக் குணத்தையும் அறிந்திட உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

கடவுள் தனக்கே உரிய அழகுடன், தன் நீதியையும், அன்பையும், தாராளக் குணத்தையும் இணைத்து முடிவுகள் எடுக்கும்போது... இறுதியில் வந்தவர்களுக்கும் நமக்கு இணையான, அல்லது நம்மைவிட உயர்ந்த நன்மைகளைச் செய்யும்போது... நாம் ஏமாற்றம் அடைகிறோம். முணுமுணுக்கிறோம். கடவுள் நம் பக்கம் திரும்பி, ”நான் கடவுளாய் இருப்பதால் உனக்குப் பொறாமையா?” என்று கேட்கிறார். நம் பதில் என்ன? இறைவனின் நிபந்தனையற்ற அன்பு, குறைவின்றி வழங்கும் அவரது தாராளக் குணம், அதே நேரம், இறைவனின் நீதி இவைகளைப் பற்றி நாம் எண்ணிப் பார்த்து இத்திருப்பலியில் இறைவனிடம் அவரது அன்பையும் ,இரக்கத்தையும் மன்றாடுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது இரக்கத்தின் கருவிகளாக செயல்பட்டு, மக்களிடையே பிறரன்பு செயல்களைத் தூண்டிஎழுப்புபவர்களாகத் திகழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
எம் குடும்பங்களில் அனைவரும் □உமது எண்ணங்கள் வேறு! எங்கள் எண்ணங்கள் வேறு□ என்பதைத் தெளிவாய் உணர்ந்து, உமக்கு எதிராய் முணுமுணுக்காமல் உமது உயரிய அன்பையும், நீதியையும் உணர்ந்து வாழத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைஞ்சுவோருக்கு இரங்கிடும் எம் இறைவா!**
எங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை நாம் மன்னித்து உம்மிடமிருந்து அதே மன்னிப்பையும், இரக்கத்தையும் பரிசாக பெற அருள்புரிய வேணடுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**துன்பத்தில் நல்தேற்றுதல் தரும் எம் இறைவா,**
மீண்டும் ஆலயம் வர அழைத்தவரே! இந்தத் தொற்று நோயின் தாக்கத்திலிருந்து இவ்வுலகைக்காக்கவும், மக்கள் அனைவரும் தம் பணிகளைத் தொடரப் பயமற்ற, நோயற்றச் சூழலை உருவாக்கத் தேவையான அரசியல், பொருளாதார வளர்ச்சிகள் பெறவும், மீண்டும் சமுக உறவுகள் தழைத்திடவும் உமது அருள் ஆசீரைப் பொழியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மாசின்மையின் ஊற்றாகிய எம் இறைவா,**
எம் குழந்தைகள், இளமையில் அதிகமாக உம்மைத் தேடவும், உம் வார்த்தைகளை வாழ்வாக்கி, தம் சொல்லாலும், செயலாலும் திருஅவைக்கும், மனிதகுலச் சமுதாயத்திற்கும் சான்று பகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பேரின்பப் பரம்பொருளே! எம் இறைவா!**
எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், தங்கள் கிறிஸ்தவக் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றவும், உமது நம்பிக்கைக்குரிய பணியாளர்களாக வாழ்ந்து இறையரசைக் கட்டி எழுப்பவும் வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.